Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 10 ( 24 - 06 - 1991 ) திங்கட்கிழமை ஓசை: 126

## வடக்கிற்கு வீடமைப்புக் கடன்கள் முடக்கம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் புதிதாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள வீடமைப்புத்திட்டக் கடன்கள் வடபகுதிக்கு முடக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர். அவர்கள் இதுபற்றி மேலும் கூறுகையில் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களைப் (6 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் - சிறிலங்காவின்

# பாரிய இராணுவ நடவடிக்கை

# புலிகளினால் முறியடிப்பு

### ஊரடங்கு நீக்கம்?

வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த சில தினங்களாக அமுல்படுத்தப் பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட உள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## 8 நாள் மோதலின் பின் படை முகாம் திரும்பியது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கை புலிகளின் தொடர்ச்சியான தீவிர எதிர்த்தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து முன்னேறிய பகுதியில் நிலை கொள்ளமுடியாது இராணுவம் முகாம் திரும்பியுள்ளது.

கடந்த பதின்நான்காம் திகதி செட்டிகுளம், பாவற்குளம் ஆகிய இராணுவமுகாம்களில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். 14ஆம் திகதி காலை செட்டிகுளமுகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் பூவரசம் குளப்பகுதியில் முதலில் மோதல் ஏற்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்கு வானூர்தி இன்று சாவகச்சேரியிலும், கைதடியிலும் மக்களின் பார்வைக்காக வைக்கப்படும். நாளை 25 ஆம் திகதி கொடிகாமத்திலும், பளையிலும் மக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

இந்த உலங்கு வானூர்தி ஏற்கனவே சுன்னாகம், பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய இடங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## வீரவணக்கம்

நேற்று கட்டுவனில் சிறிலங்கா படையினருடன் நடைபெற்ற நேரடி மோதலில் 2-ம் லெப் ரவிராஜ் (சின்னராசா தவராசா, கும்பளாவளை, அளவெட்டி) என்னும் போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## லெப். கேணல் சந்திரன் அஞ்சலிக் கூட்டங்கள்

(முல்லைத்தீவு)

எமது கடற் பிராந்தியத்தில் பயணம் செய்துகொண்டிருந்த சமயம் சிறிலங்கா அரசபடையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த லெப். கேணல் சந்திரன் (கண்ணாடி) உட்பட ஏழு போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அஞ்சலிக்கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை (6 ஆம் பக்கம் பார்க்க)

எமது பிரச்சினையை தீர்க்க

## வெளிநாட்டு ஆலோசனை; துருப்புக்கள் தேவையில்லை

— பிரேமதாசா

(கம்புருபிட்டி)

குறுகிய வேறுபாடுகளைக் கடந்து வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணமுன் வருமாறு சகல கட்சியினருக்கும் ஜனாதிபதி பிரேமதாசா வேண்டுகோள் விடுத்துள்ளார். எமது பிரச்சினைக்கு தீர்வு காண வெளிநாட்டு ஆலோசனைகளோ அல்லது வெளிநாட்டுத்துருப்புகளோ தேவையில்லை என்றும், அவர் கம்புருபிட்டியவில் கூறினார். (6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்டன் விஜி நினைவாக பூநகரியில் ஹர்த்தால்

(ஈச்சமோட்டை)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த கப்டன் விஜி நினைவாக சென்ற வெள்ளிக்கிழமை பூநகரியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலைகள், அரசாங்க ஸ்தாபனங்கள், வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுச்சங்கங்கள் என்பன இயங்கவில்லை. அங்கு இரங்கல் கூட்டமும் இடம்பெற்றது. (43)

## எந்தத் தாக்குதலையும் முறியடிக்கத் தயார்

— ஞானம்

(வவுனியா)

எமது தமிழீழ மண்ணை ஆக்கிரமிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசபடையினருக்கும் எமக்கும் இடையே இன்று கடும் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் ஆயிரம் வேங்கைகள் மரணித்தாலும் எமது போராட்டம் ஓயாது.

கடந்த 18 ஆம் திகதி மாலை வவுனியா ஈச்சங்குளம் (6 ஆம் பக்கம் பார்க்க)

முப்படை கூட்டுத் தலைமையகத்தைத் தாக்கிய

## தற்கொலைப் படையின் பாதம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கூட்டுப்படை தலைமையகத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற குண்டுச் சம்பவத்தில் ஈடுபட்டோர் என சந்தேகிக்கப்படும் நபரின் பாதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட் (6 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட்டின் எச்சரிக்கையை அரசு ஏற்கவில்லையாம்

(கொழும்பு)

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களில் பொதுமக்களின் எண்ணிக்கை மட்டுமே இருபத்தியொன்று என சிறிலங்கா அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. மேலும் சுமார் நாற்பது இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் நம்பப்படுகிறது. தற்கொலைப் படையினரின் தாக்குதல் மேலும் தொடரலாம் எனக் கருதி அரசு பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் "பீப்பா" குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவமுகாமைச் சூழவுள்ள பகுதிகளில் பயணிகள் விமானம் ஒன்று நேற்றுக் காலை 10.10 மணி தொடக்கம் 11 20 மணி வரை ஆறிற்கும் மேற்பட்ட பீப்பாக் குண்டுகளை வீசியுள்ளது.

## ஆயுதம்தாங்கிய கொள்ளையர் புலிகளிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பிரதேசங்களில் சில வருடங்களாக செயற்பட்டு வந்த ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களின் குழு ஒன்றை விடுதலைப்புலிகள் கைது செய்துள்ளதுடன் பல ஆயுதங்களையும் இவர்களிடமிருந்து பறிமுதல் செய்துள்ளனர்.

இருபதுக்கும் மேற்பட்ட கொள்ளையர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இக்குழுவினர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களிடமிருந்து தானியங்கித்துப்பாக்கி, கைத்துப்பாக்கி, கைக்குண்டு போன்ற ஆயுதங்களுடன், கொள்ளையடிக்கப்பட்ட பணம், தங்கநகை என்பனவற்றில் பெரும்பகுதி மீட்கப்பட்டு விட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இக்குழுவின் தலைவனாக சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கண்ணன் எனப்படும் ஜெயராசா நந்தகுமார் (வயது 28) என்பவர் செயற்பட்டுவந்திருப்பதும் தெரியவந்துள்ளது.

## எறிகணைத் தாக்குதல்

(பலாலி)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 5.30 மணிபலவில் கட்டுவன் சந்தியை நோக்கி இருபதிற்கும் மேற்பட்ட ஐந்தங்குல எறிகணைகளும், பத்திற்கும் மேற்பட்ட துப்பாக்கி எறிகணைகளும் ஏவப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கவில்லை.

சந்தேக நபர்களை

## கைதுசெய்ய விசேடஅதிரடிப் பொலிஸ் படைப் பிரிவு

(சென்னை)

ஸ்ரீபெரம்புதூரில் கடந்த மாதம் 21 ஆம் திகதி மரணமுற்ற ராஜீவ் காந்தியின் விசாரணை தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுக் குழுவினரால் சந்தேகிக்கப்படும் ரகுவரன், சுபா ஆகிய இருவரையும் கண்டு பிடிப்பதற்காக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வராக வைத்தியலிங்கம்

புதுச்சேரி இந்திரா காங்கிரசின் சட்டமன்றத் தலைவராக வி. வைத்தியலிங்கம் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முன்னாள்புதுச்சேரி அமைச்சரான இவர் நேற்றுமுன்தினம் இந்திரா காங்கிரஸ் சட்டமன்றஉறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள்

| மண்ணில் மலர்வு | | விண்ணில் உயர்வு |
|---|---|---|
| 10 – 12 – 1916 |  | 25 – 05 – 1991 |

அமரர்

**உயர்திரு. பொ. காசிப்பிள்ளை**

திதி: 24-06-1991

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத்திகழ்ந்து எல்லோரையும் நல்வழியில் நடத்திச்சென்று இடைநடுவில் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து போனீர்களே உங்களைக் காணாது தாயை இழந்த கன்றுகள் போல நாம் தவித்து நிற்கின்றோம் தாங்கள் எம் மீது வைத்திருந்த பாசத்தையும், நேசத்தையும் என்றென்றும் மறவோம்

உங்களது நல் ஆத்மா எல்லாம் வல்ல சிதம்பர சுப்பிரமணிய சுவாமியின் பாதகமலங்களில் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

''தேவி அகம்''
மழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (R - 1479)

### வரிவிளம்பரம்

**தேவை**

மலைவேம்பு விதைகள் தேவை. மிக்கிவைற் யாழ்ப்பாணம். (B/2713)

**தவறிவிட்டது**

புத்தூர் சந்திக்கும் வசாவைப் பாலத்துக்கும் இடையில் ஹொண்டா மோட்டார் சைக்கிள் பதிறிக்கவர் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சந்தையா மனோகரராசா, இராமசவைபடி, கோப்பாய் தெற்கில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் உண்டு. (R/1480)

### ஞாபகார்த்தப் போட்டியும் அஞ்சலிக் கூட்டமும்

(பருத்தித்துறை)

றதீஸ் றோசான் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியும் அஞ்சலிக் கூட்டமும் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு புலோலி அல்வாய் மாவீரர் மைதானத்தில் நடைபெறும்.

### நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவி லெப். நித்திலா (நல்லையா பவானி, வல்வெட்டித்துறை) மருத்துவ பீட மாணவன் லெப். சுதர்சன் (சிவகுருநாதன், மட்டக்களப்பு) ஆகிய இருவரினதும் நினைவஞ்சலிக் கூட்டம் இம் மாதம் 27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினால் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 27 06 87 இல் லெப். சுதர்சனும், 21 06 89 இல் லெப் நித்திலாவும் வீரமரணமடைந்தனர்.

## நினைவு கூருகின்றோம்.. 1991 - 06 - 24

1987 ஆம் ஆண்டு இதேதினம் சிறிலங்காப்படையினரின் உலங்குவானூர்தியின் தாக்குதலினால் உயிரிழந்த வயோதிபப் பெண்

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமெய்திய

**உதயன்** (ச. இன்பராசா - மாமாங்கம், மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி திருநகரில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். டானியல்** (அந்தோனிப்பிள்ளை இரத்தின கோபால் - புளியங்குளம்)

சுன்னாகத்தில் தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்து கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கஉறுப்பினர்

**இராமநாதன் கணேஷ்குமார்**

1990 ஆம் ஆண்டு உன்னிச்சைப்பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**சீனு** (சி. சயதாசன் - பெரியகல்லாறு)

**அலோசியஸ்** (புவிராஜசிங்கம் - கோட்டைக்கல்லாறு)

**நகுலேஸ்** (கணபதிப்பிள்ளை சோமசேஸ்வரன் - சுரடிஜனாறு)

**வேற்றோ/சின்னவன்** (சுப்பிரமணியம் விஜயகுமார் - மண்டூர்)

பலாலியில் சிறிலங்காப்படையினரின் எறிகணைத் தாக்குதலினால் வீரமரணமெய்திய

**ரதீஷ்** (நல்லான் கிட்டினன் ஜெகநாதன் - புலோலி)

மாங்குளம் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**ஹெறோ** (செ. மாணிக்கவாசகர் - நெடுங்கேணி)


பரந்தனில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணையால் கொல்லப்பட்ட இரண்டு பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

= விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2719)

# நினைவஞ்சலி



லெப். கேணல்

## சந்திரன்

(இரா. முத்துலிங்கம்
4ஆம் வாய்க்கால், கிளிநொச்சி)

**29-09-90இல் கடலில் வீரமரணத்தை தழுவிக் கொண்ட லெப்.கேணல் சந்திரன் உட்பட பதினைந்து போராளிகளுக்கும் எமது**

## நினைவஞ்சலிகள்

உங்கள் நினைவுகளைச் சொன்னபடி,
வன்னி மண்ணில் வாழும் மனிதர்கள் மட்டுமல்ல
நிழல் மரங்களும், வீசும் காற்றும் ஒவ்வொரு அங்குல
நிலமும்,

நீங்கள் தாங்கிக் கொண்ட துயரச் சுமைகளும்
கடந்து வந்த கடினமான பாதையும் கூட பசுமையான
நினைவுகளாய் இம்மண்ணில் படிந்து
போயுள்ளது.

புன்னகை பூத்தபடி எம்தேசப்படத்தை இப்பூமிப் பந்தில்
பொறிப்பதற்காக நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை
வரலாறாய் மாறும்.

இரத்தின மகால் ஜுவலறி
கண்டி வீதி, கிளிநொச்சி.

நித்தி ரேட்
கண்டி வீதி, கிளிநொச்சி.

(R-1481)

## முனைமழுங்கா நினைவுகளும் முளைவிடும் நாங்களும்

மழை காவிய முகில்களினூடே
சூரியன் உலவிச் சுவடுகள் மரங்களில்
மழையில் சிலிர்த்த
பூக்களும் மொட்டும் பொலிந்த காலையில்
தூரமய்ப் படசிகள் பறந்து மறையுமுன்
ஜீவனடங்க,
பேரொலி எழுப்பி வானில் திரிந்தன
மூன்று போர் விமானங்கள்.

கூடிய சந்தை ஓடிக் கலைந்தது
கடை; தெரு வீடிலுமிருந்தும்
வாழ்வின் பெறு உயிர் ஒன்றென
உயிரை சுமையாய் சுமந்து ஓடினர் மனிதர்
யுத்த விமானங்களின் கீழே நசிந்தது நாள்,

□ □

அடையாளம் தவறிய கைதுகளில்
முன்பும்
எங்கள் ஊர்கள் இழவு கண்டன.
மூன்று அல்லது நான்கு இராணுவ வண்டிகள்
உறுமியபடியே
கிராமத்தில் நுழையும்.
எந்த வீட்டில் முன்பும் நிற்கும்.
தவர்களுள் தூங்கிய விஷ னிதர்
அரசின் ஏவலைத் தலையெனக் கொண்டு
சேவகமாய்
எவரையும் கைது செய்வர் ஐயத்தில்;
விடுதலை பற்றிச் சிந்திப்பதுவும்
விலங்கிட்ட முறையை எதிர்ப்பதுவும்
இங்கு பெரும் குற்றமெனவே
அடையாளம் தவறிய கைதுகள் நிகழ்ந்தன;

ஊரில்,
ஒவ்வொரு கைதும் நிகழும் போதும்
சுதந்திரம் பற்றிய இலட்சிய மனிதர்
நூறு நூறாய் முளைவிட்டனர்.
கைதும் சித்திரவதையும்
காலலுள் கொலையும் நிகழ்ந்த
வெறியின் செயலை வெறுத்துப் பறந்தார்.
புதிய வேருடன்
முளை விட்டெழுந்தார்
முனை மழுங்கா நினைவுகளில் இன்னும் இவை
எங்கள் வாழ்வின் இராணுவக் கொடுமை போலவே.

□ □

குறிதவறிய குண்டு வீச்சில்
வாழைத் தோட்டத்தில் நீர்விட்டவரோ
'ஆஸ்பத்திரி' வளவில் மூன்று குழந்தைகளும்
வேறுசில நோயாளரும்,
மிதி வண்டியில்
சுமை இழுக்கும் ஓர் வியாபாரி
போர்க்கள மொன்றில் அகதியான சிறுமியென
எவரும் கொலையுண்டிறப்பர்.
கொலையுறும் எவரும் தமிழர் என்பதே
இங்கு இலக்கு என்பதனால்
ஜீவனடங்க,
ஊரின் முகட்டில் பேரொலி எழுப்பி
மரணப் பறவைகள் மனிதரைத் தேடுதலாய்...

புத்த கோபுரங்களில் 'பிரித்' ஓதிடும்
பௌத்த பிக்குகளின் காதுகள் செவிடுபட
எங்களின் அழுகுரல்களையும் மேவி ஒலித்த
யுத்தப் பேரோசை
எங்கள் மண்ணில்
பாடசாலை வளவில் நின்ற
அரச மரத்தில் வீழ்ந்த குண்டில்
அரசம் முறிந்து வீழ்ந்து போயிற்று
இந்தப் போரில்,
'மஹாவ சத்...' அருப்பிடித்த சத்தியங்களை
உண்மையின் நெருப்பில் எரித்து முடிப்போம்;

சொந்த மண்ணில் வாழ்வு முளைக்க
நம்மை
விதைக்கும் நிலையில் மகிழ்வைக் கொள்ளும்
இந்த நாளை
துணிவுடன் ஏற்பீர் துணிவுடன் ஏற்பீர்
பேரொலி எழுப்பி வானில் திரியும்
யுத்த விமானங்களின் கீழும் நீவிர்
இனியும் இனியும் அணியாய் திரள்வீர்;

- எஸ். கருணாகரன்

நன்றி: முத்தமிழ் விழா மலர்.

### வடமராட்சியில்

## வலது குறைந்தோர் பற்றிய விபரம் திரட்டப்படுகிறது

வடமராட்சி வலது குறைந்தோர் சங்கம் பருத்தித்துறை, கரவெட்டி வடமராட்சிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள வலது குறைந்தோர் பற்றிய விபரங்களைத் திரட்டவுள்ளது

போறூட் நிறுவனத்தின் உதவியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைக் கொண்டு அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் மூலம் இவ்விபரங்கள் திரட்டப்படவுள்ளன.

இப்பகுதிகளில் உள்ள வலது குறைந்தோர் தத்தமது பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து திருப்பி ஒப்படைக்குமாறு வடமராட்சி வலது குறைந்தோர் சங்கம் அறிவித்துள்ளது. (25)

### கல்மடு, ஈச்சங்குளப்பகுதியில்

## வைத்தியசாலை அமைக்க அபிவிருத்திச்சங்கம் வேண்டுகோள்

(வவுனியா)

வவுனியா கிராமப்புற மக்களின் வைத்திய தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கல்மடு அல்லது ஈச்சங்குளம் பகுதியில் பொது வைத்திய சாலை ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஈச்சங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுள்ளது

மேற்படி அபிவிருத்திச்சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பியகடிதத்தில் வவுனியா நகரப்பகுதிதவிர்ந்த, ஏனைய இடங்களில் அமைந்திருந்த வைத்திய சாலைகள் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலினால் முற்றாகச் சேதமடைந்துள்ளன வைத்திய உபகரணங்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் வவுனியா கிராமப்புற மக்கள் துன்பமடைந்துள்ளனர்

ஆகவே மடு திருப்பதி அகதி முகாம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டு தங்களால் பராமரிக்கப்பட்டு வரும் வைத்திய சாலை போல கல்மடு அல்லது ஈச்சங்குளம் பகுதியை பாதுகாப்பு வலயமாய் பிரகடனப்படுத்தி விரைவில் வைத்தியசாலை ஒன்று அமைத்துவழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (9)

## சுகாதார முறையிலற்ற பாண்கள் பிடிக்கப்பட்டன

மல்லாகம் சந்தியிலுள்ள சாப்பாட்டுக் கடைகள் சுகாதாரப் பகுதியினரால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டது. இந்தப் பரிசோதனையைத் தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவு நேற்றுமுன்தினம் செய்தது.

இந்தக் கடைகளில் சுகாதாரத்திற்கு ஒவ்வாத பாண்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததை அவதானித்ததை தொடர்ந்தே இந்தப் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் கைப்பற்றப்பட்ட பாவனைக்குதவாத பாண்கள் மல்லாகம் சந்தியிலேயே வெட்டிப் புதைக்கப்பட்டதாகவும் நமது மல்லாகம் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். (83)

## தேர்த்திருவிழா

வரணி சேவலுப்பிட்டி கந்தசாமி ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3.00 மணிக்குநடைபெறும். தீர்த்த உற்சவம் 26ஆம் திகதி புதன் கிழமை பூரணை தினத்தன்று பி. ப. 3.00 மணிக்கு இடம் பெறும்.

இதே தினம் தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் கோவிலில் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 26 ஆம் திகதி புதன் பூரணை தினத்தன்று காலை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (24)

## பாலஸ்தீனம் உருவாகினால் இஸ்ரேலுக்கும் பாதகம்

(பரிஸ்)

பாலஸ்தீன நாடொன்று உருவாகினால் இஸ்ரேலுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதால் அத்திட்டத்தை தாம் ஏற்கப் போவதில்லை என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மூஷி ஆரென்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரான்சில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஆரென்ஸ் பாலஸ்தீன நாடொன்றை உருவாக்கினால் தமது பாதுகாப்பிற்கு நிரராக செயற்படும் என்று கூறி அத்திட்டத்தினை நிராகரித்ததாக தெரிவித்தார்.

## வலைப் பந்தாட்டப் போட்டி

குருநகர், சனசமூக நிலையம் வழங்கும் வெற்றிக்கிண்ணத்துக்கான 6 பேர் கொண்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியை நடத்த குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் முன்வந்துள்ளது.

குடாநாடு தழுவிய அளவில் நடத்தப்படும் மேற்படி போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

செயலாளர், பாடும் மீன் விளையாட்டுக் கழகம் குருநகர் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறது. (2

## தமிழக அமைச்சரவை இன்று பதவியேற்பு

சென்னை

தமிழகத்தில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான சட்டப்பேரவை உறுப்பினர்கள் இன்று பதவியேற்கவுள்ளனர். இதற்கு இசைவாகத் தமிழகத்தில் நிலவிவந்த ஆளுநர் ஆட்சி முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது

முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா இன்று பதவி ஏற்பார்

இவரது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள பெயர்களின் விபரங்கள் வருமாறு

இரா. நெடுஞ்செழியன் கே. ஏ. கிருஷ்ணசாமி, எஸ். ரி. சோமசுந்தரம், ஆர். எம். வீரப்பன் க. ராஜாராம், சி. அரங்கநாயகம், எஸ். முத்துச்சாமி, கே. ஏ. செங்கோட்டையன், மதுசூதனன், எஸ். கண்ணப்பன், அழகு திருநாவுக்கரசு, கு. ப. கிருஷ்ணன், டி. எம். செல்வகணபதி, முகமட் அலி, திருமதி இந்திரகுமாரி, எம். ஆனந்தன், டி. ஜெயகுமார் ஆகியோர் இந்த அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் நெடுஞ்செழியன் கிருஷ்ணசாமி, சோமசுந்தரம், வீரப்பன், ராஜாராம், அரங்கநாயகம், முத்துச்சாமி ஆகியோர் எம். ஜி. ஆர் அமைச்சரவையிலும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மல்கோத்திரா ராஜினாமா

டில்லி)

பஞ்சாப் ஆளுநர் மல்கோத்திரா தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனிடம் தமது ராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்துள்ளார்.

ஆனால் இவரை தொடர்ந்தும் அப்பதவியிலேயே இருக்கும் படி ஜனாதிபதி கேட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆண்டு விழா

(பருத்தித்துறை)

கொருடாவில் கலையரசி சனசமூக நிலையத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், கலை விழாவும் இம்மாதம் 27 ஆம் திகதி நிலையத்தலைவர் திரு. மா. தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிலே யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலா பிரதம விருந்தினராகவும், செல்வி ஜெயந்தினி தியாகராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (25,

## லால் கிசன் அத்வானி

பத்தாவது இந்திய மேற்சபையின் எதிர்க்கட்சித் தலைவராக வருவரென எதிர்பார்க்கப்படும் லால் கிசன் அத்வானி 1990 ஒக்டோபரில் உலகின் கவனத்தை ஈர்த்தவர் இவர் பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் 08-11-29இல் (பாகிஸ்தான் உருவாகுமுன்னர்) கிருஸ்ணசந், கஜானி தம்பதிகளின் புதல்வராகப் பிறந்தவர். 15 ஆவது வயதில் ஜனசங்க உறுப்பினராகச் சேர்ந்து கொண்டவர் கிறிஸ்தவ கல்லூரிகளில் கல்வி பயின்றவர் கராச்சி சென்பற்றிக்ஸில் ஐரிஸ் போதகரிடம் கல்வி கற்றவர். சட்டத்துறைப் பட்டதாரியானவர்; இவரது மனைவி கமலா என்பவர். இவர்களுக்கு பிரதீபா எனும் மகளும். ஒரு மகனும் உள்ளனர். தீவிர மதவாதி என வர்ணிக்கப்படும் இவரது வீட்டில் பூசை அறைகூட கிடையாது. சொந்த வழ்வில் மதத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவரில்லை

1951 இல் தீவிர அரசியலில் ஈடுபடத்தொடங்கிய இவர், அவ்வருடம் டில்லிப் பகுதி ஜனசங்கத் தலைவரானார்; 70 - 73 காலப்பகுதியில் அகில இந்திய ஜனசங்கச் செயலாளராகவும், 73 - 77 காலப்பகுதியில் தலைவராகவும் பதவி வகித்தவர். 1986 இல் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவரானார்;

67 - 70 காலப்பகுதியில் டில்லி மாநகர முதல்வராகப் பதவி வகித்த இவர், 1970 தொடக்கம் லோக்சபா உறுப்பினராக உள்ளார். 19 வருடகாலம் ராஜ்சபா உறுப்பினராகவும் பதவிவகித்தவர் 1989 யூலைமாதம் வி. பி சிங்கின் கூட்டணி அரசாங்கத்தில் தகவல் ஒலிபரப்பு அமைச்சராக இருந்த இவர், 1990 ஒக்டோபர் வி. பி. சிங் அரசு கவிழக் காரணமானார்.

ஐம்பது, அறுபதுகளில் காந்தி கொலை தொடர்பாக ஜனசங்கத்தின் மக்களுக்கு இருந்த வெறுப்பையும், 1984 பொதுத்தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியின் தோல்வியையும் (2 இடங்கள் மட்டுமே வெற்றி பெற முடிந்தது) மீறி வெற்றிப் பாதையில் கட்சியைக் கொண்டு சென்றவர்.

1990 ஒக்டோபர் 23 இல் ராமர் கோவில் தொடர்பான இரதபவனியின்போது பீகாரில் கைது செய்யப்பட்டார். 1977 நெருக்கடி நிலையின்போதும் சிறையில் இருந்தவர்.

## ஜேம்ஸ் பேக்கர் அல்பேனியா விஜயம்

(திரானா)

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் நேற்று அல்பேனியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க வைஏகாதிபத்திய நாடு என்று அல்பேனியா விமர்சித்து வந்தது தெரிந்ததே.

ஜேம்ஸ் பேக்கர் அவர்களை வரவேற்க பெருமளவிலான மக்கள் திரண்டிருந்தனர். அமெரிக்கக் கொடியை அசைத்தபடி பெருமளவிலாக திரண்டிருந்த மக்கள் பேக்கரை வரவேற்றனர்.

ஜேம்ஸ் பேக்கர் அல்பேனியாவுக்கான ஆறு மில்லியன் அமெரிக்க டொலர் உதவி பற்றி திரானா நகரில் அறிவித்தார்.

## எரிமலைக்கு அஞ்சி அமெ. படை வெளியேற்றம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் எரிமலைக்கு அருகே நிலைகொண்டிருந்த அமெரிக்க விமானப் படையினரை அமெரிக்கா திரும்ப அழைத்துக் கொண்டுள்ளது. ஏ என் எஸ் மிக்லே என்ற அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலிலேயே 1500 விமானப்படை ஊழியரும், அவர்களது குடும்பத்தினரும் புறப்பட்டுச் சென்றார்கள்.

அடுத்து வரும் சில நாட்களில் மேலும் 3000க்கு மேற்பட்ட விமானப்படை வீரர்களும் புறப்பட்டு விடுவரென மணிலா மூலவரை மேற்கோள் காட்டி பி பி சி தெரிவித்தது. கிளார்க் விமானத்தளம் என்று அழைக்கப்படும் அமெரிக்க விமானத்தளம் கடந்த இருவாரங்களாக எரிமலைச் சாம்பல்களால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அந்தத் தளத்தை மீண்டும் பயன்படுத்த முடியுமா என்பதில் அமெரிக்க அதிகாரிகள் ஐயம் தெரிவித்துள்ளார்கள்.

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க கடுமையான முடிவுகள்

### இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்

(டில்லி)

இந்தியாவின் பொருளாதார பிரச்சினைகளை சமாளிக்கப் கடுமையான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என இந்திய பிரதமர் பி வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் மக்களுக்கு ஆற்றிய உரையில் இவ்வாறு தெரிவித்துக் கொண்டார். எளிமையான வழிஏதும் இல்லை என்பதால் நாட்டின் பொருளாதார சுதந்திரத்தை பேண மக்கள் தேவையான தியாகங்களை புரிய வேண்டும் என்றும் தாமதமின்றி இனியாவது மக்கள் சிக்கனநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் இந்தப் பொருளாதார பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவொன்றினை எடுக்க தமது அரசாங்கம் முயன்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



ஒத்திவைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் ஒரு மாத காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், சர்வதேச செலாவணி நிதியத்துடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

பஞ்சாப் ஜம்முகாஷ்மீர், அசாம் ஆகிய மாநிலங்களில் நிலவும் நிலைமையால் எழுந்துள்ள அபாயத்தை போக்கிட தமது அரசாங்கம் முனைந்து வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளுடன் இந்தியாவின் கௌரவ நிலை தொடர்ந்து பராமரிக்கும் விதத்தில் அரசு முயற்சிகள் இருக்கும் என்றும், அயல் நாடுகளுடனான பகுதியில் அமைதி நிலவும் வளமுள்ள நிலையானபகுதியாக இருக்கச் செய்யவும் வசதியாக அந்நிய உறவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தமது அரசாங்கத்தின் வெளியுறவு கொள்கைபற்றி குறிப்பிடும் போது தெரிவித்தார்.

## தீவிரவாதிகளை அகற்ற சிதம்பரம் வைத்த திட்டம்

(சென்னை)

தமிழகத்திலிருந்து தமிழ்த் தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்கான இரண்டு கட்டத் திட்டமொன்றை மத்திய இணையமைச்சர் ப சிதம்பரம் முன்வைத்துள்ளார்.

இதன் முதலாவது கட்டமாக 1983ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டு வரையான பகுதியில் செய்தது போல் குறிப்பிட்ட சில இடங்களில் உள்ள அகதி முகாம்களுக்கு அகதிகளை அனுப்பிவைப்பதாகும் பின்னர் ஒவ்வொரு அகதியையும் ஆராய்ந்து, அவரில் எவரிலாவது சந்தேகம் இருப்பின் அவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும்.

## எள் உற்பத்தியும் எண்ணை வள அதிகரிப்பும்

எள் ஒரு பருவகாலப் பயிராகும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் பயிரிடுவதால் அதிக விளைச்சலை எதிர்பார்க்கமுடிகின்றது. கோடை கால எள் சித்திரை வைகாசியிலும், இடைப்போக எள் ஆனி, ஆடியிலும் மாரிகால எள் பெருமழைக்குப் பின்னான மார்கழியிலும் பயிரிடப்படுகின்றது.

இருவாட்டித்தரையும், வளம் நிறைந்த மணற்தரையும் எள் பயிர் செய்கைக்கு ஏற்றநிலப் பகுதி ஆகும். இந் நிலங்களுக்கு திருப்திகரமான வடிகால் வசதி செய்தல் அவசியம்ஆகும் இப்பயிர் செய்கைக்கு உவர் நிலப்பகுதி ஏற்றது அல்ல. எள் விதைக்கும் நிலப்பகுதி நான்கு முறையாவது புரட்டி உழுத நிலத்தில் ஈரப்பற்று உள்ள போது விதைத்தல் வேண்டும்.

பசளைத்தன்மை அதிகம் காணப்படின், மதாளிப்பு ஏற்பட்டு விளைச்சலைக் குறைக்கும். மணல் தரையாயின் மாட்டெரு, கூட்டெரு இடுதல் நன்று. எள் உற்பத்திக்குப் பின் வயல்களில் நெல் செய்கை பண்ணலாம். இன்று கலப்புப்பயிராகக் குரக்கன், பயறு. பயிற்றை போன்ற வற்றையும் செய்கை பண்ணலாம்.

எள் முதிர்ச்சி அடையும் போது இலைகள் பழுத்து உதிரும், காய்கள் செம்பழுப்பு நிறம் அடையும். இக்காலம் பகுதிகளில் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் 3 - 6 அந்தர் எள்ளு அறுவடை செய்யலாம். ஒரு புசல் எள்ளில் இருந்து 12 - 14 போத்தல் எண்ணெய் பெறலாம். எள் பிண்ணாக்கில் 46 வீதம் புரதமும் 10 வீதம் எண்ணெயும் இருக்கின்றது. இவை சத்து நிறைந்த உணவுப் பொருளாகும் எண்ணெய் உற்பத்தியை பெருக்குவதன் மூலம் உணவுத் தேவைக்கான எண்ணெய் வள அதிகரிப்பையும் மேற்கொள்ள முடியும்

தமிழீழ
ஆய்வு நிறுவனம்

### ஜேர். - சோவியத் உறவுகளில்

## மோசமான அத்தியாயமே ஜேர்மனிய படையெடுப்பு

(பேர்லின்)

சோவியத்யூனியனும், ஜேர்மனியும் சமரசம் செய்து கொள்ள வேண்டுமென்று இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஜேர்மனியின் படை எடுப்பு இந்த இரு நாடுகளின் கடந்த கால உறவுகளில் மோசமான ஒரு அத்தியாயம் என்று ஜேர்மனியப் பிரதமர் ஹெல்மட் கோல் தெரிவித்துள்ளார்.


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

91 Dec. DAY CLASSES

O/L

பிரிவு 2 (8. 30 a. m. – 1. 30 p. m.)

இன்று ஆரம்பம்: (24. 06. 1991) (காலை 8. 00)

EVENING CLASSES

பிரிவு 3 ஆரம்பம்: 26. 06. 1991 (3. 00 p.m. - 5. 40 p.m.)

மு. கு: ★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

(B-2704)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 மீட்டல் வினா விடை கலை, வர்த்தகம் Day Classes


( 8. 00 a. m. – 1. 00 p. m.)

இன்று ஆரம்பம்: (24-06-1991) (காலை 8-00)

மு: கு: ★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

(B-2705)





## யாழ் நகரில் கம்ப்யூட்டர் கல்வி

* Basic * d Base III+ * Lotus 1-2-3

Word Processing

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

28-06-91 (1. 30 p. m.) (திங்கள், புதன், வெள்ளி) 29-06-91 (1. 30 p.m.) (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

மேலதிக விபரங்களுக்கு-

UNIKCO COMPUTER CENTRE 37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(B-2720)

### சிந்தனைக்கு

சில வேளைகளில், உன்னதமான வெற்றியைப் போலவே, உத்தமமான தோல்வியாலும் உலகுக்கு உருவான நன்மை ஏற்படும்.

— எட்வர்ட் டௌடன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 24.06.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தூ.பெ.எண் 05

# தி.மு.கவின் தோல்வியும் கருணாநிதியின் முடிவும்

தேர்தலில் அடைந்த படுதோல்வியைத் தொடர்ந்து தி.மு.கவின் தலைவர் மு. கருணாநிதி தனது எம்.எல்.ஏ. பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இதன் மூலம் தமிழகசட்டசபையில் தி.மு.கவின் சார்பில் ஒரு எம்.எல்.ஏ. தானும் இல்லாத நிலை உருவாகியுள்ளது. 1957 ஆம் ஆண்டிற்குப் பின் முதன்முதலாக தி.மு.க. உறுப்பினர் இல்லாத சட்டசபை கூடப்போகின்றது.

1949 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாதுரையினால் உருவாக்கப்பட்ட தி.மு.க. இம்முறைபோல் தேர்தலில் எப்பொழுதும் படுதோல்வி அடைந்ததில்லை. தி.மு.க.வின் தோல்வி தென்னிந்தியாவில் திராவிட இயக்கத்திற்கு விழுந்த பலமானதொரு அடியென்றே சொல்லலாம்.

தி.மு.க. ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முக்கிய இலக்காக தென்னிந்தியாவில் உள்ள திராவிட மாநிலங்கள் (தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கன்னடம்) இணைந்த ஒரு சுயஇராச்சியத்திற்காகப் போராடுவதும், மக்களுக்கு, பகுத்தறிவை ஊட்டுவதும், ஹிந்தித் திணிப்பை எதிர்ப்பதுமே அதன் பிரதான நோக்கமாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் அரசியற் சூழ்நிலைக்கும் அதிகாரவர்க்க நலனின் காரணமாகவும் கோரிக்கைகளும் போராட்டங்களும் படிப்படியாக கைவிடப்பட்டன.

திராவிடநாடு கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் சென்னை ராஜஸ்தானி என இருந்த பழைய பெயரை தமிழ் நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன் நின்று கொண்டது. இந்தப் போராட்ட நிறுத்தத்திற்கு சீன இந்தியப் போரைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் அறிஞர் அண்ணாதுரை. இதன் மூலம், சுயநிர்ணய உரிமைப் போராட்டம் கைவிடப்பட்டது.

மேலும், ஹிந்தி எந்த மாநிலத்திலும் திணிக்கப்படமாட்டாது என முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் அறிவித்தலோடு ஏறத்தாழ அப்போராட்டமும் பலவீனப்பட்டது. இடைக்கிடையே அரசியல் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஹிந்தி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றதாயினும் அப்போராட்டமும் பெருமளவில் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளது. பகுத்தறிவு வாதத்தினுள்ளும் பல கருத்து மோதல்கள் இடம் பெற்று அதுவும் குழப்பத்திற்கு உள்ளானது.

அதேவேளை, மறுவளமாக தி.மு.க. தொடர்ந்து இருதடவைகள் ஆட்சிக்கு வந்ததும் தமது கொள்கைகளைக் கைவிட்டு ஆட்சியைப் பாதுகாப்பது மட்டுமே அவர்களின் பிரதான இலக்காக இருந்தது. இதற்காக தமது கொள்கைக்கு முரண்பாடானவர்களுடன்கூட கூட்டுச் சேர்ந்தார்கள். எம்.ஜீ. இராமச்சந்திரனின் அரசாங்கத்தை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி கலைத்தபோது இ. காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்த தி.மு.க. இரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட உறவினை இலட்சியக் கூட்டு என வர்ணித்தது ஆட்சிக் கவிழ்ப்பிற்கும் சாதகமாகத் தொழிற்பட்டார்கள்.

அதாவது தி.மு.க முழுமையாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதே இலக்காகக் கொண்டு செயற்பட ஆரம்பித்தது. அதற்காக தனது கொள்கைகள், செயற்பாடுகள், போராட்டங்கள் என்பனவற்றைக் கைவிட்டது. தமது எதிர்காலத் திட்டங்களை மக்களுக்கு முன்வைக்கத் தவறியது. இதனால் மக்களிடம் நம்பிக்கையை இழந்தது. அத்தோடு குடும்ப ஆதிக்கத்தினையும் நிலை நிறுத்த கழகத் தலைமை முற்பட்டது.

இந்நிலையில் மக்கள் ஆட்சிமாற்றம் ஒன்றை விரும்பினர். அத்தோடு ராஜீவ் காந்தியின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலையும் சேர்ந்து தி.மு.கவிற்குப் படுதோல்வியை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை தி.மு.க. ஆட்சியில் தமிழக மக்கள் வெறுப்படைந்து ஆட்சி மாற்றம் ஒன்று தேவை எனக் கருதி தி.மு.க. அல்லாத அரசாங்கம் ஒன்றைத்தேர்ந்தெடுத்திருந்தால் அது ஏற்புடையது.

ஆனால், கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டது போன்று அனுதாபப் புயலாலும், வீண்பழியாலும் தாம் தோற்கடிக்கப்பட்டு விட்டோம் என்பது உண்மையானால் தமிழக மக்களின் தீர்ப்பு முற்றிலும் நியாயமானது என்று சொல்வதற்கில்லை. தமிழக மக்கள் உண்மையைப் பகுத்தறியத் தவறிவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியின் உண்மைக்குப் புறம்பான பிரசாரத்தில் மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்றே கூறலாம்.

இந்த நிலையில் தி.மு.கவின் தேர்தல் படுதோல்வி திராவிட இயக்கங்களின் அஸ்தமனங்கள் நெருங்கி வருகின்றது என்று எண்ணவைக்கின்றது. இதைத்தவிர்த்து திராவிட இயக்கம் உயிர்வாழ வேண்டுமானால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பதைவிட மக்களுக்கு நம்பிக்கையும், தெளிவும் தரக் கூடிய திட்டங்களை முன்வைக்கவேண்டும். அவ்வாறில்லாமல் வெளியில் ஆட்சி அதிகாரப் போட்டியும், கட்சிக்குள் குடும்ப ஆதிக்கப் போட்டியும் மட்டுமே தொடருமாயின் தி.மு.கவின் அஸ்தமனம் தவிர்க்க முடியாததாகி விடும். இது திராவிட இயக்கத்தின் அஸ்தமனமாகவும் ஆகலாம்.

# சரத்பவார் பற்றிய நரசிம்மராவின் தந்திரம்

பி.வி நரசிம்மராவ் இவர் ஒரு சந்தர்ப்பவாதியல்ல. கட்சி விட்டுக்கட்சி மாறுபவர் அல்ல. வெற்றியோ, தோல்வியோ ஒரே கட்சியுடன் நிற்பவர். இவர் ஒத்தோடும் புத்தியுள்ளவர். தந்திரமிக்கவர். இந்திரா காங்கிரஸின் மூளையாக உள்ளவர். இந்திராவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். சரியோ, பிழையோ நேருகுடும்பத்தை விசுவாசிக்கும் இயல்புள்ளவர்.

இந்திராகாந்தி காலத்தில் பிரதான அரசியல் தீர்மானங்களை எடுப்பதில் சூத்திரதாரியாயிருந்தவர். றோ' எனும் உளவு ஸ்தாபனத்தை அமைப்பதில் இந்திராகாந்தியுடன் பக்கத்துணையாயிருந்தவர். கட்சிக்கு நிதி சேகரிப்பதற்கான ஒரு வழிமுறையாக ஆயுதக் கொள்வனவில் பணத்தை வெட்டுவதே சிறந்தவழிமுறையென இந்திராவுக்கு ஆலோசனை கூறியவர். பிற்காலத்து 'போபோஸ்' ஊழலுக்கும் இத்தகைய பிழையான பழக்கமே வழிவகுத்தது. இந்த வகையில் காங்கிரஸின் நலன் மீது அக்கறைகொண்டு ஊழலுக்கு வழிவகுத்தவர். ஆனால் தனிப்பட்ட முறையில் தனக்கென ஊழல் செய்யாதவர்.

வெங்கடேஸ்வரன் சீனாவில் இந்தியாவுக்கான தூதராயிருந்த போது சீன-இந்திய எல்லைத் தகராறில் ஒரு பொது உடன்பாட்டுக்கு சீன அரசாங்கத்துடன் வந்தார். உண்மையில் அந்த உடன்பாடு சீன-இந்திய எல்லைப் பிரச்சினையை தீர்த்து வைக்கக் கூடியதாக இருந்தது.

உடன்பாட்டிற்கான அந்த நகலை வெங்கடேஸ்வரன் இந்திராகாந்தியிடம் நேரடியாகச் சமர்ப்பித்தார். இந்திராகாந்தியும் அவ்வுடன்பாட்டை ஏற்றுக் கொண்டு பி.வி.நரசிம்மராவுடன் இறுதியாக ஆலோசனை கலந்தார். ஆனால் நரசிம்மராவ் அந்த உடன்பாட்டை ஏற்கவேண்டாமென ஆலோசனை கூறினார். உடன்பாடு சரியானது என்பதை நரசிம்மராவ் ஒப்புக்கொண்டார். ஆனால் அது இந்திரா காங்கிரஸின் நலனுக்குப் பாதகமாய் அமைந்துவிடும் என்பதே அவரது ஆலோசனை. எனவே சரியான ஒன்றை கட்சி நலனுக்காக இவர் மறுத்தார். இவரது ஆலோசனை சரியானது என்று வெங்கட்ராமனும் கூறினார்.

இந்த வகையில் இந்திரா காங்கிரஸின் நலனில் அக்கறை கொண்டு அதற்கேற்ப அக்கறை காட்டியவரே நரசிம்மராவ். இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக தமிழீழவிடுதலை போராட்ட இயக்கங்களுக்கு ஆயுதமும், பயிற்சியும் வழங்கி அதன்மூலம் இலங்கையரை சரணடையச் செய்யலாம் என்று ஆலோசனை வழங்கியவர்களில் ஒருவரே பொதுவாக இந்திராவின் நம்பிக்கைக்குரியவர். இந்திராவின் காலத்தில் உள் நாட்டு, வெளிநாட்டு காரியங்களில் இவர் சூத்திரதாரியாக இருந்துள்ளார். இத்தகைய நபர்தான் இன்று பிரதமராகியுள்ளார்.

இவர் நேரடியாக யாரையும் எதிர்க்கும் சுபாவம் இல்லாதவர். எதிரிகளிடம் கூட முகம் கொடுத்து பழகும் பண்புள்ளவர். பொதுவாக அனைவரையும் அரவணைத்துப் போகும் பாங்கு உள்ளம் கொண்டவர். ஆனால் இவர் தந்திரம் மிக்கவர். அடிப்படையில் இவர் மிகவும் நெழிவு சுழிவானவர். இவரின் அரவணைத்துப் போகக் கூடிய இயல்பை பலரும் எப்போதும் பெரிதுபடுத்துவதுண்டு. ஆனால் இப்பொழுது இவருடன் எதிர்த்துப் போட்டியிட்ட சரத்பவாரை இவர் அரவணைத்தது மிகவும் தந்திரம் மிக்கதாகும். பொதுவாகத் தன்னை நேரடியாக எதிர்ப்பவர்களை பெரிதும் பழிவாங்குவதும், ஒதுக்கித் தள்ளுவதுமே பல தலைவர்களின் கையாளும் விதமாகும். சரத்பவாரை ராஜீவ் மத்திய அரசாங்க நிலையில் இருந்து ஒதுக்கினார். ஆனால் மாநில அரசாங்கத்தில் ஒதுக்க முற்பட்டபோது தோல்வி கண்டார். உண்மையில் ராஜீவ் காலத்தில் பவார் மத்தியரசில் முன்னணிக்கு வரக்கூடிய நிலையிலேயே இருந்தார். ராஜீவும் பவாரும் ஏறக்குறைய ஒத்த வயதுடையவர்கள். ஆதலினால் இவர்களுக்கிடையிலான போட்டி மிகவும் கூர்மையாக இருந்தது. இந்த நிலையில் மத்தியில் பலமுடன் இருந்த ராஜீவ், பவாரை ஒதுக்குவதலே அக்கறையுள்ளவராக இருந்தார்.

ராஜீவின் மரணத்தைத் தொடர்ந்து பவார் பிரதமர் ஸ்தானத்துக்கு வர முயன்றார். ஆனால் நரசிம்மராவுக்கு சாதகமான பல அம்சங்கள் அவருக்கு கை கொடுத்தது. நரசிம்மராவ் ஒரு தென்னிந்தியர் என்பது அவருக்கு ஒரு பாதகமான விடயம். ஆனால் அதனை மேவவேண்டிய அளவுக்கு வேறு அம்சங்

சாரணன்

கள் நரசிம்மராவுக்கு கை கொடுத்தன. பொதுவாக கட்சியின் பல மட்டங்களில் நரசிம்மராவ் செல்வாக்குள்ளவராக இருந்தார். யாரையும் நேரடியாக பகைக்காமையும், அரவணைக்கும் போக்கும் இதற்கு உதவின. பாராளுமன்ற குழுவில் உள்ள இளம் எம்பிக்கள் சரத்பவாரை விரும்பிய போதும் முதியவர்களும் பாராளுமன்ற குழுவுக்கு வெளியேயுள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் கட்சி முதல்வர்கள், கட்சி அமைப்பாளர்கள், மாநில தலைவர்கள் பலரும் நரசிம்மராவையே விரும்பினர்.

பாராளுமன்ற குழுவுக்குள் நடத்தக் கூடிய தேர்தலில் இவ்வேளை தான் தோல்வி படைத்து விடுவோமா என்ற அச்சம் நரசிம்மராவிடம் இருந்தது ஆனால் பாராளுமன்றக் குழுவுக்கு வெளியே பல்வேறு மாநிலங்களிலும் தனக்கு செல்வாக்கு இருந்ததை உணர்ந்த நரசிம்மராவ் முதலில் அவர்களை அழைத்து தனக்கு சாதகமான சூழலை தோற்றுவித்தார். அதன் மூலம் நரசிம்மராவ் ஆதரவு அலை வெளியில் இருந்து உட்பாய்ந்தது. இவ்வாறாக பாராளுமன்றக் குழுவுக்கு வெளியில் இருந்தவர்களால் பாராளுமன்றக் குழுவின் மீது அழுத்தம் பாய்ச்சப்பட்டது இந்நிலையில் தனது வெற்றிவாய்ப்பின்மையை உணர்ந்து கொண்ட சரத்பவார் போட்டியில் இருந்து ஒதுங்கிக் கொண்டார். நரசிம்மராவ் பிரதமரானார். இங்கு சரத்பவாரின் நிலை தோற்கடிக்கப்பட்டதே தவிர அவர் பெருந்தன்மையாக பின்வாங்கினார் என்றில்லை.

இவ்வாறு தோற்கடிக்கப்பட்ட சரத்பவாரை நரசிம்மராவ் நேரடியாக ஒதுக்குவது சாத்தியம். ஆயினும் நரசிம்மராவ் அப்படிச் செய்யவில்லை. சரத்பவாரை கபினற் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்போவதாக அறிவித்துள்ளார். இதனைப் பார்க்கும் போது நரசிம்மராவ் பெருந்தன்மையுள்ளவர் போலத் தெரிகிறது. ஆனால் இதனை ஒரு பெருந்தன்மை என்று சொல்வதைவிட ஒரு வகையான தந்திரோபாயம் என்றே சொல்லலாம். சரத்பவாரின் ஆதரவாளரில் மிகச் சிலரே மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மந்திரி சபை மிகப் பெருமளவு ராஜீவ், நரசிம்மராவின் விசுவாசிகளைக் கொண்டவர்களாக உள்ளது.

சரத்பவாரை வெளியில் விடாது அவரை உள்ளுக்கெடுத்ததன் மூலம் நரசிம்மராவ் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார் என்ற தோரணையில் காட்டப்படுகிறது. இதனால் நரசிம்மராவுக்கு எதிராக அணிசேர்க்கும் வலுவை சரத்பவார் இழந்துவிடுகிறார். அதே வேளை பவார் ஏறக்குறைய தனிமைப்பட்டவராகவே மந்திரிசபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவருக்கு ஆதரவுள்ள அணி கபினெற்றுக்குள் இல்லை. இந்த வகையில் அவர் மந்திரி சபைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட போதிலும் சிறகுகள் வெட்டப்பட்டவராகவே உள்ளார். இதன்மூலம் இரட்டை வெற்றியை நரசிம்மராவ் தற்பாது ஈட்டியுள்ளார். முதலாவது அவர் அரவணைத்துப்போகும் இயல்புள்ளவர் என்ற தோரணையை நிரூபித்துள்ளமை. இரண்டாவது தன் எதிரியை உள்ளுக்கு எடுத்ததன் மூலம் அவரை வெளியில் பலமற்றவராக்கியமை.

# துப்பாக்கிச் சூட்டுக்கு மூன்று பொதுமக்கள் பலி

(வவுனியா)

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் உள்ள பூவரசன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த 15 ஆம் திகதி மடுதிருப்பதியிலிருந்து வந்த பொதுமக்களை நோக்கி இராணுவத்தினர் மறைந்திருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

கந்தசாமி (32), சேனாதி (34) ராசதுரை (56) என்ற பரவற்குளம் பகுதியைச்சேர்ந்தவர்களே இவ்வாறு கொல்லப்பட்டனர். (தி)

## வவுனியா - மன்னார் வீதியில்
# இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம் பெயர்வு

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கையின் காரணமாக ஆயிரக்கணக்கான பொது மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

செக்கடிப்புலவு, பம்பைமடு, சாளம்பைக்குளம், பூவரசன் குளம் ஆகிய இடங்களுடன் வேறுபல கிராமங்களைச்சேர்ந்தவர்களும் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றுள்ளனர்.

இராணுவத்தின் தாக்குதலினால் பல வீடுகளும், பல்லாயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளும் நாசமாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

# நரசிம்மராவ் அரசு ஐந்துமாதம் நீடிக்காது

## - வாஜ்பாய்

(புதுடில்லி)

பி. வி. நரசிம்மராவ் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோரும்போது தாம் அரசுக்கு எதிராகவே வாக்களிக்கப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஏ. பி. வாஜ்பாய் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் நரசிம்மராவ் அரசு ஐந்து மாதங்கள் ஆட்சி செய்யும் எனத் தாம் நம்பவில்லை என்றும் தங்களது கட்சி மீண்டும் ஒரு தேர்தலை எதிர்கொள்ள தயாரா என்று கேட்டபோது தமது கட்சி எதற்கும் தயாரான நிலையிலேயே இருப்பதாக குறிப்பிட்டார். ஐம்பத்தி ஏழு உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை தேவைக்கு அதிகமான பெரிய அமைச்சரவை என்றும் அவர் வர்ணித்தார்.

இதே வேளை இந்திரா காங்கிரஸ் கட்சி அமைத்திருக்கும் சிறுபான்மை அரசுக்கு ஜனதா தளமும் இடதுசாரிக் கட்சிகளும் வெளியில் இருந்து ஆதரவளிக்கக் கூடுமெனத் தெரிகிறது.

# ஜப்பான் உதவியுடன் வீதி திருத்த வேலைகள்

(கொழும்பு)

கொழும்பையும் பிரதான நகரங்களையும் இணைக்கும் நெடுஞ்சாலைகள் திருத்தப்படவுள்ளன. திருக்கோணமலை, யாழ்ப்பாணம், புத்தளம், அம்பாந்தோட்டை, கட்டு நாயக்கா வீதிகளே ஜப்பானிய உதவியுடன் திருத்தப்படும் வீதிகளாகும். திருத்த வேலைகளுக்கு ரூபா 400 கோடி செலவிடப்படவுள்ளது.

வீதிகளில் வாகனங்கள் இலகுவாக ஓடும் வகையில் மேற்படி வீதிகள் விஸ்தரிக்கப்படவும் உள்ளன.

# சேமக் காலையில் காதலர் சடலங்கள்!

(புதுக்குடியிருப்பு)

திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கந்தளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கோ. குவேந்திரராசா, (வயது 19), செட்ரீமேஸ்வரி (வயது 19) ஆகிய இருவரும் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் சேமக்காலையில் 22-6-91 சனிக்கிழமை காலை பிணமாகக் கண்டெடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பு அரசினர் வைத்திய மனையில் சேர்க்கப்பட்டனர்.

மேற்படி இளைஞனும் யுவதியும், புதுக்குடியிருப்பு சி-சி முகாமில் அகதிகளாகத் தங்கியிருந்தனர் என்றும், இவர்கள் இருவரினதும் பெற்றோர்கள் திருக்கோணமலையிலேயே இருப்பதாகவும், இது ஒரு காதல் தற்கொலையே என்றும் தெரிய வந்துள்ளது.

இவர்களினது மரண அடக்க வேலைகளை புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளரினதும் வட்டவையினதும் உதவியுடன் மேற்படி முகாம் பொறுப்பதிகாரி மேற்கொண்டார்.

புளொட்டின்

இதனிடையே இத்தகைய தாக்குதலைப் புலிகள் நடத்தக்கூடும் என்று தாம் ஏற்கனவே அரசை எச்சரித்திருந்தபோதும், அரசு அதைப் பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லையென்று புளொட் கொழும்பில் விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களின் கைப்பாவையாகச் செயற்பட்டு புலிகள் இத்தாக்குதல்களை நடத்துவதாக ஈ. பி. ஆர். எல். எப். கொழும்பில் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக புலிகளைக் கண்டனம் செய்திருக்கும் கொழும்பு பத்திரிகைகள் பலவும், கொக்கட்டிச்சோலையில் இராணுவம் நடத்திய படுகொலைக்கு இதில் பதில் தாக்குதலாக இருக்குமோ எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். இக்குண்டு வெடிப்பு சம்பந்தமாக ஆராய புலனாய்வுக்குழுத் தலைவர் குணதிலக்க தலைமையில் ஒருகுழு நியமிக்கப்பட்டு உள்ளது.

தற்கொலைப்

டுள்ளன.

கொழும்பு கூட்டுப்படை தலைமையகத்தில் நுழைவாயிலில் வெள்ளியன்று காலை நடத்தப்பட்ட வாகனத் தாக்குதலுக்கு பெரிய நீலநிற இசுசு ரக வாகனமொன்று பயன்படுத்தப்பட்டது என்று பகுப்பாய்வாளர் ஏ. ஆர். எம். விஜயசேகரா தெரிவித்துள்ளார் என்றும் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இந்த வாகனத்தில் ஒருவர் மட்டுமே இருந்தார் என கொழும்பு புலன் விசாரணைக் குழு நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் கம்பன் விழா இவ்வருடம் சிறப்பாக நடைபெற இருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் மேற்கொண்டு வருகிறார்.

லெப். கேணல்

ஒட்டிசுட்டானிலும், சனிக்கிழமை நெடுங்கேணியிலும் நேற்று முல்லைத்தீவிலும் அஞ்சலிக் கூட்டங்களும் ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று எழுச்சி நாட்களாக கழிந்தன.

இன்று புதுக்குடியிருப்பில் அஞ்சலிக்கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் அறிவித்திருக்கிறது.

கைது செய்ய

நவீன ஆயுதம் தாங்கிய விசேட அதிரடிப்படை ஒன்று நிறுவப்பட்டுள்ளதென சி.ஐ.டி. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய புலனாய்வுக் குழுவினரால் நியமிக்கப்பட்டுள்ள இந்த அதிரடிப்படை ஒற்றைக்கண் சிவராசனைக் கைது செய்வார்களென தாம் நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கிற்கு

பொறுத்த வரையில் தென்பகுதி அதிகாரிகள் தென்பகுதிக்கு அள்ளி வழங்குவதாகவும் இதேநேரம் வடகிழக்குப் பகுதிக்கு கிள்ளித்தெளிப்பதாகவும் கூறினர். (லே)

## மாணவர் பொதுக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக் கூட்டமொன்று இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளதெனவும் இதற்கு அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகந்தருமாறு யாழ். பல்கலைக்கழக மாணவரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## செஞ்சிலுவை கிளை திறப்பு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான செஞ்சிலுவைச் சங்க கிளை அலுவலகம் இன்று பிற்பகல் 1-30 மணியளவில் 59, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாரிய இராணுவ

பின்னர் தொடர்ச்சியாக சிறிய அளவில் மோதல்கள் இடம் பெற்றதாயினும் குருக்களூர், பிராமணாலங்குளம் ஆகியபகுதிகளிலேயே விடுதலைப் புலிகள் தம் தீவிர தாக்குதல்களைத் தொடுத்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு அப்பகுதியில் நிலைகொண்டனர்.

இப் பகுதியில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கு விமானப்படை விமானங்களும் உலங்கு வானூர்திகளும் துணையாக பெரும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டன; இத்தாக்குதலில் ஈடுபட்ட விமானப்படைக்குச் சொந்தமான அமெரிக்கத் தயாரிப்பான 'பெல்' உலங்கு வானூர்தி ஒன்று புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

குருக்களூர், பிராமணாலங்குளம் பகுதியில் புலிகளின் தீவிர தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் தமது நகரும் திசையை மாற்றிக் கொண்டனர்.

அதேவேளை, நெரியா மோட்டையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தை வேறொரு அணியினர் குருக்களூர் செல்ல முயற்சித்த சமயம் விடுதலைப் புலிகள் அவர்கள் மீது கடும் தாக்குதலைத் தொடுத்தனர். இம் மோதல்களில் இராணுவத்தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

எட்டுநாட்கள் இடம்பெற்ற இம் மோதலில் எழுபதுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது. விடுதலைப்புலிகள் தரப்பில் சுமார் முப்பது பேர் வீரமரணமடைந்தனர்.

இம் மோதலில் இராணுவத்தரப்பிற்கு ஏற்பட்ட பெரும் இழப்பையும், தொடர்ச்சியான புலிகளின் தாக்குதலையும் தொடர்ந்து 21 ஆம்திகதி காலை பிராமணாலங்குளத்தில் இருந்து பின்வாங்கிச் சென்று பறையனாலங்குளம் பகுதி ஊடாக கூழாங்குளம் சென்றனர். அங்கிருந்து அடுத்த நாட்காலை ஆண்டியாப் புளியங்குளம் ஊடாக மன்னார் மதவாச்சி பிரதான வீதிக்குச் சென்று செட்டிகுளம் முகாமிற்குச் சென்றனர்.

பின்வாங்கிச் சென்ற இராணுவத்தினர் ஆண்டியாப் புளியங்குளத்தில் விடுதலைப்புலிகள் வைத்த மிதி வெடிகளில் சிக்கியதில் ஆறு மிதி வெடிகள் வெடித்தன. இதில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

# மத்திய அமைச்சரவையில் இடம் பெறுவோர்

(டில்லி)

இந்தியாவின் புதிய பிரதமர் நரசிம்மராவ் பாதுகாப்பு மற்றும் கைத்தொழில் அமைச்சைப் பொறுப்பேற்றுள்ளார். ஏனைய அமைச்சுகள் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | உள்துறை | - எஸ். பி. ஜவான் |
| ★ | வெளியுறவு | - மாதவ் சிங் சோலங்கி |
| ★ | நிதி | - டாக்டர் மன் மோகன் சிங் |
| ★ | அபிவிருத்தி | - அர்ஜுன் சிங் |
| ★ | விவசாயம் | - பால்ராம் ஜாக்கர் |
| ★ | விமானப் போக்குவரத்து, சுற்றுலா | மாதவராவ் சிந்தியா |
| ★ | நீர்வளம் | - வி. சி. சுக்லா |
| ★ | சட்டம், நீதி | - விஜய பாஸ்கர ரெட்டி |
| ★ | சுகாதாரம், குடும்பநலன் | - எம். எல். போர்டி பாரி |
| ★ | ரயில் போக்குவரத்து | - சி. கே. யாதர் ஷெரிவ் |
| ★ | பெற்றோலியம் இயற்கை வாயு | - வி. சங்கர் ஆனந்த் |
| ★ | சமூக நலன் | - சீதாராம் கேசரி |
| ★ | பாராளுமன்ற விவகாரம் | - குலாம் நபி ஆசாத் |
| ★ | நகர அபிவிருத்தி | - சீலா கௌல் |

மொத்தம் 32 இணை அமைச்சர்களில் எஸ். ராமச்சந்திரன் - விவசாயம், எம். அருணாசலம் - நகர அபிவிருத்தி, வாழைப்பாடி கே. ராமமூர்த்தி - தொழில், குமாரமங்கலம் - சட்டம் நிதித்துறை, பாராளுமன்ற விவகார இணை அமைச்சர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

# திருமறைகலாமன்றத்தில் கலைக்கதம்பம்

(குருநகர்)

யாழ். திருமறைக்கலாமன்றத்தின் கலைப் பயிலக மாணவர்களின் "கலைக்கதம்பம்" நிகழ்ச்சி 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெற இருக்கிறது.

யாழ். பிரதான வீதி கலாமன்றக் கலை அரங்கில் நடைபெற இருக்கும் மேற்படி நிகழ்ச்சிகளுக்கு அருட்திரு நீக்கிலஸ் அடிகள் தலைமை வகிப்பார். (21)

# புதை குழியில் பால்மா!

யாழ். சர்வோதய இயக்கத் தலைமை அலுவலகத்தில் சுமார் நூற்றி ஐம்பது ஹைலன்ட் பால்மா பைக்கற்றுகள் வெட்டிப் புதைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. நீண்ட காலமாக களஞ்சியத்திலிருந்ததால் இவை பழுதடைந்து போனதைத் தொடர்ந்தே இவற்றை வெட்டிப் புதைக்க வேண்டியேற்பட்டதாகத் தெரிகின்றது.

## சமயாசமய ஊழியருக்கு

# ஏழு மாதங்களாக சம்பளம் கிடைக்கவில்லை

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேச சபை அலுவலக மின்சாரப் பகுதி சமயாசமய ஊழியர்களுக்கு கடந்த ஏழு மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லையாம்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்திலிருந்துப் பிற்பாடு சம்பளம் கிடைக்காததால் மேற்படி ஊழியர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனரென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (21)

வெளி நாட்டு

மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண குறுகிய வேறுபாடுகளைக் கடந்து மனப்பூர்வமாகப் பாடுபட அனைவரும் முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார், வடக்கு, கிழக்கு பிரச்சினையில் எல்லா அம்சங்கள் குறித்தும் விரிவான பேச்சுவார்த்தை நடத்தி பொருத்தமான தீர்வைக்காண எல்லாக் கட்சிகளும், குழுக்களும் முன்வர வேண்டுமென ஜனாதிபதி பிரேமதாசா வேண்டுகோள் விடுத்தார். பேச்சுவார்த்தை மூலம் மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. தொழில் வாய்ப்பு வழங்கல் தொடர்பான முரண்பாடுகள் நீக்கப்பட்டதும் அதிகார பரவலாக்கல் பற்றிய பிரச்சினைக்கே தீர்வு காணப்பட வேண்டியுள்ளது: இலங்கையின் ஐக்கியம், தன்னாதிக்கம், ஒருமைப்பாடு என்பவற்றுக்கு பங்கம் ஏற்படாத வகையில் சமாதான வழிகள் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் திடமாகவும், தயாராகவும் உள்ளது. கலந்தாலோசித்தல், விட்டுக்கொடுத்தல், மனமொத்து தீர்வுகாணல் என்பவற்றில் தீர்வுகாண தனது அரசாங்கம் எப்போதும் விரும்புகிறது என்றும் சிறிலங்கா ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எந்தத்

பகுதியில் செக்கடிப்புலவு என்னும் இடத்தில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்களுக்கு எரியூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஞானம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது எமது மக்கள் இந்த மண்ணில் நிம்மதியாக சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற காரணத்திற்காகவே இந்தப் போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களின் தியாகங்கள் உயர்ந்தது. உன்னதமானது.

அரசபடையினரின் எவ்விதமான தாக்குதல்களையும் முறியடிப்பதற்கு நாம் தயாராகி விட்டோம் எமது தமிழீழத்தை மீட்பதற்காக இன்னும் பல வேங்கைகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்வதற்கு தயாராகவே உள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி அரச படையினரின் ஹெலிகொப்டர் ஒன்று எம்மால் சுட்டு வீழ்த்தப்பட்டது விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்கது என்றார். (தி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 62 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.